# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 06 வெள்ளிக்கிழமை (20-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 202


# கிழக்கின் பாதுகாப்பு: பலப்படுத்த முயற்சி!

## புலிகளின் தாக்குதல் அதிகரிப்பு!!

கொழும்பு, ஜூன் 20

கடந்த சில நாள்களாக கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துவருவதை அடுத்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 18 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் 24 இராணுவத்தினரும்—

15ஆம் திகதி அம்பாறை மாவட்டம் மகா ஓயாவில் 14 அதிரடிப்படை கொமாண்டோக்களும்—

9ஆம் திகதி வாழைச்சேனைகிண்ணியடியில்கண்ணிவெடித் தாக்குதலில் 6 படையினரும்—

2ஆம் திகதி வாழைச்சேனை கருவான்கேணியில் 9 பொலீஸாரும் பலியாகி உள்ளனர்.

அத்துடன் கிழக்கில் ஆங்காங்கே இடம்பெற்ற சிறு.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பராயில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

உரும்பராய் பகுதியில் நேற்று மாலை தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

சில பொதுமக்கள் காயமடைந்ததாகவும் படையினர் சிலரும் காயமடைந்திருக்கலாம் என்றும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

(இ)

## தாண்டிக்குளத்தில் நடத்தியது பரீட்சார்த்த தாக்குதலே!

### புலிகள் பிரமுகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

தாண்டிக்குளம் — நொச்சிமோட்டைப் பகுதிகளில் சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் வெறும் பரீட்சார்த்தமான தாக்குதல்களே. விரைவில் எமது பலத்தைக் காட்டுவோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ் தெரிவித்தார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

தாண்டிக்குளம் தாக்குதலுக்கு அவரே தலைமை வகித்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றை எதிர்நோக்கி வவுனியா நகர் முழுவதும் இரா

[ 8 ஆம் பக்கம் பார்க்க)

# விமானச் சேவை நிறுத்தப்பட்டதற்கு புலிகளின் அழுத்தம் காரணமா?

### படை அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 20

'லயன் எயர்' விமானச் சேவை நிறுத்தப்பட்டதன் பின்னணியில் புலிகளின் அழுத்தம் இருந்திருக்கலாம் என படை அதிகாரிகள் சந்தேகிப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் இருந்து பலாலிக்கு பொது மக்களை ஏற்றி இறக்குவதற்காக கஸகஸ்தான் அரசினால் வழங்கப்பட்ட இந்த விமானங்கள் படையினரை ஏற்றி இறக்க பயன்படுத்தப்பட்டதை அடுத்து அதன் சேவை இடை நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

இந்த விமானங்கள் பறப்பதற்கு கஸகஸ்தான் அரசு அனுமதி வழங்காத காரணத்தாலேயே இரு வாரங்களாக இந்தவிமானங்கள் கொழும்பு — பலாலி சேவையில் ஈடுபடவில்லை என்றும் —

ஒரு மாத காலத்துக்கு சேவையில் ஈடுபடவே தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் —

அதன் பின் இச்சேவை நடைபெறுமா? இல்லையா?

(8ஆம் பக்கம் பார்க்க)

## படையினரை ஏற்றி இறக்க புதிய விமானம் வாடகைக்கு

கொழும்பு, ஜூன் 20

கொழும்பில் இருந்து பலாலிக்கு பொதுமக்களை ஏற்றி இறக்குவதற்கு வழங்கிய விமானங்களை துருப்புக்களை ஏற்றி இறக்கப்பயன்படுத்தக் கூடாது என்று கஸகஸ்தான் அரசாங்கம் தனியார் விமான முகவரான ''லயன் எயர்'' நிறுவனத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளதால் வடக்குக்குதுருப்புக்களையும் அவர்களுக்குத் தேவையான பொருள்களையும் ஏற்றிச் செல்ல புதிய விமானங்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் விமானப்படைக்கு ஏற்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் அமைச்சு அதிகாரி பலதரப்பினரையும் சந்தித்து பேச்சு

கொழும்பு, ஜூன் 20

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சின் தென்னாசியப் பிரிவு அதிகாரியான ரீமிஸ், கொழும்பில் பலதரப்பட்டவர்களுடனும் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்த அவர் அங்கு நடத்தும் பேச்சுக்கள் தொடர்பான [illegible] எதுவும் வெளியிடப்படவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சியில் இவரது விஜயம் முக்கியம் [illegible] நம்பப்படுகிறது. (இ-3)

# இந்திய மீனவர்கள் மீது சூடு! இராமேஸ்வரத்தில் பதற்றம்!!

சென்னை, ஜூன் 20

நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த மூன்று சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரு சம்பவத்தில் இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார். அதே படகில் சென்ற மற்றும் இரு மீனவர்கள் உயிர்தப்பி இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். இறந்தவரின் சடலத்தையும் இவர்கள் கொண்டு வந்து சேர்த்தனர்.

மற்றும் இரு சம்பவங்களில் இரு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விடுமுறையில் வீடு புறப்பட்ட கான்ஸ்டபிள் பலாலியில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 20

விடுமுறையில் கொழும்பு செல்வதற்காக பலாலி விமான நிலையத்துக்கு சென்ற பொலீஸ் கான்டபிள் ஒருவரிடம் தடைசெய்யப்பட்ட—வெடிவகையான பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தில் சோதனை செய்யப்பட்ட சமயம் இந்தப் பொருள் இருந்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் ஏ.என். இராமச்சந்திரன் முன் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இந்த ான்ஸ்டபிளிடம் இவ்வகையான வெடிப்பொருள் எவ்வாறு வந்தது என்பது குறித்து விசாரணை நடத்த கொழும்புக்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (இ-3)

## ஈ. பி. டி. பியிலிருந்து வெளியேற்றப்பட்ட எம். பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்

கொழும்பு ஜூன் 20

ஈ. பி. டி. பி. அமைப்பில் இருந்து சமீபத்தில் வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். இராமேஸ்வரன்' ஆர். இராமமூர்த்தி ஆகிய இருவரும் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அலரி மாளிகையில் சந்தித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணைக் குழு முன் 124 பேர் நேற்று வரை சாட்சியம் அளித்தனர்

கொழும்பு, ஜூன் 20

காணாமற்போனோர் தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு முன்பாக நேற்று வரை 124 பேர் சாட்சியம் அளித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்று வரை பலாலியில் நடந்த இவ்விசாரணைக்கு 180 முறைப்பாட்டுக்காரர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முதல் நாள் 54 பேரும், இரண்டாம் நாள் 44 பேரும், மூன்றாம் நாள் 26 பேரும் அவர்களது சாட்சிக்காரர்களும் சாட்சியம் அளித்தனர்.

இக்குழுவின் விசாரணை நாளையும் நடைபெறும்.

(இ-3)

# இந்திய மீனவர்கள் எண்மரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 20

இரணைதீவுக் கடற்பகுதியில் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு இந்திய மீனவர்களும் நேற்று யாழ். நீதிவான் ஏ. என். இராமச்சந்திரனால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் அறிக்கை கோரப்பட்ட போதும், இதுவரை அறிக்கை எதுவும் கிடைக்கவில்லை.

நேற்று இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இவர்களை ஈ. பி. டி. பி. அமைப்பினர் பொறுப்பேற்பதாக நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஈ. பி. டி. பி. அமைப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தற்சமயம் ஈ. பி. டி பி. அமைப்பினரின் பராமரிப்பில் உள்ள இவர்களை இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைக்க ஈ. பி டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழா

திரு. க. நடராசா
இளைப்பாறிய ஆசிரியர் அவர்கள் தமது
**75 ஆம் ஆண்டு**
பூர்த்தியை இன்று 20-06-1997 பிற்பகல் 3 மணியள வில் கலைமகள் வாசம், செங்குந்தா வீதி, திருநெல் வேலி கிழக்கில் கொண்டாடுகிறார்.

(47898) மனைவி, மக்கள், மருமக்கள்.

# ஜூன் மாத பயிற்சிப் பரீட்சை

- **3, 4, 5, 6, 7, 8 வகுப்புகளுக்கு** 20 - 06 - 97 வெள்ளி காலை 8-30
- **9, 10, O/L - 21-6 97 சனி காலை 8-30**
- 23 - 06 - 97 இல் வினாத்தாள் விடைகளுடன் பெறலாம்.

பரீட்சைப் பகுதி
**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(47910)

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் கனகரத்தினம்

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த வீரசிங் கம் கனகரத்தினம் அவர்கள் 18-06-1997 அன்று காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும், சந்திரா, யோகராசா, நவரத்தினம், தெய்வேந்திரன், ஜெயரட்ணம், ஜெயந்தினி, கிருபாகரன், காலஞ் சென்ற யதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்சோதிவர்ணன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந் துக்கல்லூரி), விஜயலட்சுமி, மல்லிகா, சாந்தினி, வில்வராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-06-97 அன்று (வியாழக்கிழமை) நடைபெற்று பூதவுடல் கண்ணா டிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. அருட்சோதிவர்ணன்
(மருமகன்)
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(சி/980)

## திருமதி உதயாதேவி றொபின்

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைப் பிறப் பிடமாகக் கொண்ட உதயாதேவி றொபின் அவர் கள் 17-6-97 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20-6-97 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக்கிரிகைக ளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்ப டும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
பீ.றொபின்
(கணவன்)
இல. 10, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(47912)

## சின்னப்பு அன்னம்மா

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மு. சின்னப்பு (புகையிரதத்திணைக்கள அதிகாரி) அவர் களின் பிரியபத்தினி சி. அன்னம்மா 18 - 06 - 97 இரவு பரம்பொருளின் பாதாரவிந்தத்தைச் சென்ற டைந்து விட்டார். அன்னார் திருமதி இ. நாகரத்தி னம் (நுவரேலியா), திருமதி ந. நவரத்தினம் (மேற்கு ஜேர்மனி), திருமதி ந. தங்கரத்தினம், திருமதி ஜெ. இராசமணி (லண்டன்), திருமதி க. சீத்தா (அதிபர், மூளாய் அ மி. பாடசாலை), திருமதி ஜீ திருச்செல்வி (முன்பள்ளி ஆசிரியை வ.வ.பி.ச.உ. அலுவலகம், மயி லிட்டி), சி. கதிர்காமநாதன் (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு அன்னையும், காலஞ்சென்ற சி. இராச நாயகம் (நுவரேலியா) மற்றும் சி நடராசா (கொல் லங்கலட்டி) சி. நல்லதுரை, சி. ஜெயராஜா (லண் டன்), ச. கணேசன் (மூளாய்), வை. ஜீவநாதசர்மா (தொல்புரம்), திருமதி க கத்தரீன் (லண்டன்) ஆகி யோரின் அன்புள்ள மாமியாரும், கிறிஸ்தோபர், கிறிஸ்ரி, கிறிஸ்ரபெல், பவளம், கணேஸ், குட்டி, ரைனி, மங்களம், பாபு, ரவி, ஷாலினி, ஜானகி, ஜெயரஞ்சலி, ரமணன். லோஜினி, தங்கா, செந்தில் ஆகியோரின் அருமைப்பேர்த்தியும், தனுஷனின் ஆசைப் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மடத்துப்பிள்ளை யார் கோயிலடி இல்லத்தில் நடைபெற்றுத் தகனக் கிரியைகள் மூளாய் பித்தனை மயானத்தில் 19- 06- 97 வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றன. தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்:
வை. ஜீவநாதசர்மா
நிரந்தர முகவரி:-
'அம்பாள் வாசா'
கோயில் தெற்கு வீதி,
மாவிட்டபுரம்.
மடத்துப்பிள்ளையார் கோயில்
தொல்புரம், சுழிபுரம்.
(தற்காலிக முகவரி)
(47288)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 20
ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா வும் கலை நிகழ்ச்சியும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்ட பத்தில் அதிபர் செ. சிவநட ராசா தலைமையில் நடை பெறும். (இ-4)

## வலைப்பந்தாட்ட பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ். கல்வித் திணைக்கள மும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து நாளை சனிக்கிழமையும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை யும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதா னத்தில் வலைப்பந்தாட்டப் பயிற்சி வழங்கவுள்ளன,

இந்த இரு நாள்களிலும் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 5-00 மணி வரை பயிற்சி வழங்கப்படும்.
(இ)

## பண்டத்தரிப்பில் மண்எண்ணெய் விநியோகம்

திருநெல்வேலி ஜூன் 20
பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்க எரி பொருள் நிரப்பு நிலையத் திற்கு இலங்கைப் பெற்றோலி யக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகத்தினால் மண்எண்ணெய் விநியோகிக் கப்பட்டு வருகின்றது.

இப் ,பகுதியிலுள்ள விவ சாயிகளும், பொதுமக்களும் தங்களுக்கு தேவையான மண் எண்ணெயை இங்கு பெற்றுக் கொள்ள முடியும் என்று இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். சிவ ஞானம் தெரிவித்தார்.
(ஐ-135)

## வேலணை மணி

கல்வி நிறுவனம்
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
ஆண்டு ஆறு முதல்
A/L வரை
**கலை/வர்த்தகம்**
ஆரம்பம்: 21-06-1997
காலை 9-00 மணி
வெகுவிரைவில்
ஊர்காவற்றுறையிலும்.
நிர்வாகி
(47914)

## சந்திரா சோதிட நிலையம்

உங்கள் அபிமான
சோதிடர், குரும்பசிட்டி
சண்முகராசா மாஸ்டரை
கொக்குவில் மேற்கு
ஆடிய பாத வீதியில்
சந்தைக்கு மேற்கு-வீதி யின் – ஆரம்பப் பகுதியில் வீதியோரமாக முதலா வது வலப்பக்க வீட்டில் சந்திக்கலாம்.
சு. சண்முகராசா
(47287)

## விலாச மாற்றம்

நான் சிலகாலம் திரு கோணமலையிலிருக்க வேண்டியுள்ளதால் 01 - 07 - 97 இலிலிருந்து தொடர்பு கொள்ள வேண் டிய முகவரி:

ந. சிவபாதம், "புத்தொளி"
460, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

## விளையாட்டுப் போட்டி

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றத்தின் பாலர் பிரிவு மாணவர்களின் வரு டாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு பாரதி கலாமன்ற வளவில் உள்ள மைதானத்தில் நடை பெறும்.
(இ)

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### அறிவித்தல்

1. குடாநாட்டு மக்களின் இடம்பெயர்வு காரண மாக எமது சங்கத்தின் உறுப்பினர்கள் பலரின் முகவரிகள் மாறியுள்ளன. எனவே சங்க உறுப் பினர்கள் அனைவரையும் தங்கள் தற்போதைய முகவரியைச் செயலாளருக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறோம்.
2. இதுவரை எமது சங்கத்தில் அங்கத்துவம் பெறாத கல்லூரி பழைய மாணவர்களைக் கல்லூரி யுடன் அல்லது சங்கச் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று நிரப்பிச் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளும்படி அன்புரிமையுடன் வேண்டுகிறோம்.

செயலாளர்,
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/979)

## யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்

JAFFNA DISTRICT A.A.A

### அறிவித்தல்

1. மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற் றோரைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அமெச் சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்த உத்தேசித் துள்ள பரீட்சை யாழ்ப்பாணம் அநுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி இடம்பெறும் எனத் தெரியவரு கின்றது.
2. மெய்வன்மைச் சட்டவிதிகள் தொடர்பான பயிற்சி வகுப்புகள் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந் தோருக்காக இவ்வார இறுதியில் பின்வரும் ஒழுங் கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

★ 21-06-1997 சனிக்கிழமை காலை 10.00 மணி: மெய்வன்மைச் சட்டவிதிகள் பற்றிய பயிற்சி வகுப்பு.

★ 22-06-1997 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணி: மெய்வன்மை பயிற்சி வகுப்பு.

செயலாளர்,
யா. மா. அ. மெ. சங்கம்
(சி/978)

## அறிவித்தல்

எனது கண்பார்வை குறைந்து கொண்டு போவத னால், பணிப்பாளர் சபை, இலங்கை செஞ்சிலுவை சபை (சண்டிலிப்பாய்), அந்தியகால சங்கம், பிரதேச சபை ஆலோசனைக்குழு, பிரசைகள் குழு, கிளைக் குழு ஆகியவற்றிலிருந்து ஆற்றிய சேவையை நிறுத்தி அவற்றிலிருந்து விலகிவிட்டேன் என்பதை மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

யே. பெ. அருமைநாயகம்
நவாலி தெற்கு.
(47909)

## புலமைப்பரிசில் '97

15-06-1997 எமது நிறுவனத்தில் நடந்த 28 ஆவது பரீட்சையில் உயர்ந்த புள்ளி பெற்ற முதல் மூவர்

1) சாம்பசிவம் ஸ்ரீகோகுலன் — யாழ். இந்து ஆரம்ப பாடசாலை — 191 புள்ளி
2) மதுராந்தகா செல்வரத்தினம் — கோப்பாய் சரவணபவானந்தா வி. — 189 புள்ளி
3) தியாகராஜா சுகந்தன் — சென்ஜோண் பொஸ்கோ — 185 புள்ளி

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்!

★ 22-06-1997 ஞாயிறு 29 ஆவது பரீட்சை வழமை போல் நடைபெறும்.

**BOND INSTITUTES** யாழ்ப்பாணம்.
(47911)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படையினருக்கு ஏற்படும் இழப்புகள் ஆட்சேர்ப்புப் பணியைப் பாதிக்கும்

## இராணுவ விமர்சகர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

போர் முனையில் படையினர் சந்தித்துவரும் இழப்புகள் இராணுவத்துக்குப் புதிதாக ஆள்களைச் சேர்க்கும் பணியைப் பாதிக்கும் என்று இராணுவ விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்துக்கு மேலும் ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஒருவார காலத்துக்கு பரந்த அளவில் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற விருப்பதாக இராணுவத்தின் ஆளணி நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியான பிரிகேடியர் ஜெயந்த ரணவீர தெரிவித்துள்ளார்.

இராணுவத்துக்குத் தேவையான அளவு உறுப்பினர்களை இதன் மூலம் சேர்த்துக் கொள்ள முடியும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பரந்த அளவில் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இம்முறை இடம்பெறவுள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் போர்முனையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பின்னடைவு இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாக இராணுவ அதிகாரிகளும், இராணுவ ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சிங்கள இளைஞர்களை போருக்கு அனுப்பிவைக்கும் பெற்றோர்களுக்கு எச்சரிக்கையாக அமைந்து விட்டது.

இதனால் கட்டாய இராணுவ சேவையை அறிமுகப்படுத்தும் நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

வவுனியாவில் அண்மையில் நடந்த தாக்குதல் தென்பகுதி கிராமங்களில் உள்ள பெற்றோர்களை பல விதமாகச் சிந்திக்க வைக்கும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது என முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

எனினும் தேசிய இராணுவ சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய உசித நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இக் கட்டத்தில் பெண்களை இராணுவத்துக்கு சேவையாற்ற அழைப்பது குறித்தும் அரசு சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-150)

### மாணவருக்கு பரிசில்கள்

தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கல்வி அபிவிருத்தி நிதியத் திட்டத்தின் கீழ் சங்க எல்லைப் பரப்பில் உள்ள 25 பாடசாலைகளில் கடந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவர் க. அருந்தவபாலன் தலைமையில் சங்க கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுடன் ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சங்க பொது முகாமையாளர் சி. சிவபாதசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-117)

### காவலரண் வாபஸ் பெறப்பட்டதால்

## கெப்பிற்றிக்கொலாவையில் விவசாயிகள் வெளியேற்றம்

வவுனியா, ஜூன் 20

வவுனியா மாவட்டம் கெப்பிற்றிக்கொலாவை வீதியில் 8 ஆம் மைல்கல் பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்டதால், அப்பகுதியில் வாழ்ந்த சிங்கள விவசாயிகள் அங்கிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாமில் தங்கியுள்ளனர்.

கஸ்வேவ, சிக்குஸ்வேவ, துட்டுவேவ ஆகிய இடங்களில் இருந்தே அவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

கெப்பிற்றிக் கொலாவையில் உள்ள அகதி முகாமில் தங்கியுள்ள இவர்கள், தமக்குப் பாதுகாப்பு வழங்கினால் மட்டுமே மீண்டும் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர முடியும் எனத் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகள் அப்பகுதியில் ஊடுருவித் தாக்குதல்களை நடத்துவதாலேயே அப்பகுதி காவலரண்கள் வாபஸ் பெறப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-164-3)

### முல்லை மாவட்டத்தில்

## மர நிழல்களின் கீழ் 384 குடும்பங்கள்

வவுனியா, ஜூன் 20

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த 384 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 685 பேர் முல்லை மாவட்டத்தில் மரங்களுக்குக் கீழ் அவல நிலையில் உள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவு வீதியில் பேராறு கரைப் பகுதியில் உள்ள காடுகளிலேயே இவர்கள் மர நிழல்களில் தங்கியுள்ளனர் என்றும் —

எந்தவித வசதிகளும் இன்றி அவர்கள் அவல நிலையில் உள்ளனர் என்றும் — அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ-164-3)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விரைவில் காற்று அடிக்க வசதி

திருநெல்வேலி, ஜூன் 20

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கு இலவசமாகக் காற்று அடிக்கும் திட்டம் மீண்டும் யாழ். மாவட்ட நிலையங்களில் விரைவில் செயற்படுத்தப் படும்.

முதற் கட்டமாக யாழ். பிரதான வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலும், கோப்பாய் ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும், புலோலி ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-135)

### பண்டத்தரிப்பு காடாப்புலம்

## கிராமிய ஆஸ்பத்திரி வளவில் நிழல் மரங்கள் களவாகத் தறிப்பு

திருநெல்வேலி, ஜூன் 20

பண்டத்தரிப்பு காடாப்புலம் பகுதியில் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை அமைந்துள்ள வளவில் நிற்கும் பாரிய மரங்கள் சில விசமிகளால் வெட்டி அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்திய சாலை சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ளதால் அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் இருப்பதில்லை, இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி விறகுக்காக மரங்கள் தறிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

நிழலுக்காக நடப்பட்ட இந்த மரங்கள் சுமார் 25,30 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரங்களாகும்.

இதேவேளை — சேதமடைந்துள்ள கிராமிய வைத்தியசாலையின் கட்டடப் பொருள்களும் அங்கிருந்து களவாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-135)

### கப்பல்களில் இடவசதி இல்லை

## தனியார் பொருள்கள் கொழும்பில் தேக்கம்

வடமராட்சி, ஜூன் 20

கப்பலில் வடக்கே எடுத்து வருவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் கப்பல்களில் இடவசதி கிடைப்பதில் ஏற்படும் கால தாமதம் காரணமாக கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக தனியார் வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தனியாரின் பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்காக கொழும்பு - பருத்தித்துறை மார்க்கத்தில் சேவையிலீடுபடும் கப்பல்கள் அனைத்தும் சிறியவையாகும். அவற்றில் தலா சுமார் 2 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களையே ஏற்றலாம். இதனால் அதிக அளவு பொருள்களை கப்பல்களில் ஏற்ற முடியாமல் இருக்கிறது.

தனியார் வர்த்தகர்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்காக கொழும்பில் பொருள்களை கொள்வனவு செய்து பொதி செய்து கப்பல்களில் ஏற்றுவதற்காக தயார் நிலையில் வைத்துள்ளனர். எனினும் கப்பல்களில் இடம் கிடைக்காமையினால், பொருள்களுடன் அவர்கள் அங்கு தவம் கிடக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-173)

## செய்திச் சாரம்

### பாலர் பாடசாலை விளையாட்டு விழா

நல்லூர் முத்தமிழ் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் செங்குந்த இந்துக் கல்லூரி முன்றிலில் பாடசாலை அதிபர் செல்வி ச. சியாமளாதேவி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கு. இராமச்சந்திரன் கலந்து கொள்வார். (ஐ)

### அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

இணுவில் தெஸ்பியன் கலை வட்டம் நடத்தும் மாதாந்த அறிவியற் கருத்தரங்குத் தொடரில் இன்று 'தென்னாசியவில் கட்டட சிற்ப, சில்ப வரன் முறைகள் பற்றிய ஒரு நோக்கு'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஸ்ணராஜா கருத்துரை வழங்குவார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு இணுவிலில் உள்ள தெஸ்பியன் கல்வி நிலையத்தில் இக் கருத்தரங்கு இடம் பெறும். (ஐ)

### குருநகருக்கு 86 பேர் வருகை

குருநகர், ஜூன் 20

பள்ளிக்குடாவில் இருந்து கடந்த புதனன்று குடாக்கடல் ஊடாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேர் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர். (ஐ-51)

### நோயாளர் கப்பல் சேவை இரு தினங்கள்

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினால் வாராந்தம் ஒரு தடவை நடத்தப்பட்டு வரும் நோயாளர் கப்பல் சேவை அடுத்த வாரம் மட்டும் இரு தினங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் இச் சேவைகள் இடம் பெறவிருக்கின்றன, (ஐ-3)

### சிறுவர் விளையாட்டுப் போட்டி

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் பயிலும் சிறுவர் கலைக்கூட மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-51)

### டீசல் விநியோகம்

உரும்பிராய், மல்லாகம், மருதனார்மடம் ஆகிய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அண்மையில் முதன் முறையாக டீசல் விநியோகித்துள்ளது.

இதேவேளை வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையதிற்கும் கோப்பாயிலுள்ள நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் விரைவில் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

### மக்கள் கடை இடம் மாற்றம்

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கி வந்த வர்த்தகத் திணைக்கள மக்கள் கடை கடந்த புதன்கிழமை முதல் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (ஐ-117)

### நிரந்தர நியமனம் வழங்கவில்லை

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் 1994 ஆம் ஆண்டு முதல் பட்டதாரி பயிலுநர்களாக பணியாற்றி வரும் 19 பட்டதாரிகளுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (ஐ 117)

### கருத்துப் பாசறை

யாழ். றோட்டறிக் கழக இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களுக்கான கருத்துப் பாசறை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

### உணவு முத்திரை விநியோகம்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப்பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கான 15 ஆவது தொடர் உணவு முத்திரைகள் கிராம உத்தியோகத்தர்களினால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் காலம் தாழ்த்தாது கிராம உத்தியோகத்தர்களிடம் தங்களுக்கான உலர் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

### உதவிப்பணம்

கொழும்புத்துறை, ஜூன் 20

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடந்த மே மாதக் கொடுப்பனவுகள் தற்போது யாழ். பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பணத்தைப் பெறுவோர் தத்தமது பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு நேரில் சென்று மே மாதக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேசச் செயலாளர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருள்கள் ஏற்றி இறக்குவதற்கான கூலி 1997 (அ)

1997. 05. 23 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்த அனைத்து லொறி உரிமையாளர்களினதும் மற்றும் அரச தனியார் துறையினரின் அறிவுறுத்தலுக்குமாக, யாழ். செயலக கேள்விச் சபையினால் 01. 06. 1997 இல் இருந்து நடைமுறைக்கு வருமாறு அனுமதிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| | இருந்து | வரை | கூலி (இருவழி) ரூபா |
|---|---|---|---|
| 1. | காங்கேசன்துறை துறைமுகம் | காங்கேசன்துறை - களஞ்சியம் வரை | ரூ. 500/- |
| 2. | பருத்தித்துறை துறைமுகம் | மந்திகை - களஞ்சியம் வரை | ரூ. 600/- |
| 3. | காங்கேசன்துறை துறைமுகம் | யாழ். - களஞ்சியம் வரை | ரூ. 3,100/- |
| 4. | பருத்தித்துறை துறைமுகம் | யாழ். களஞ்சியம் வரை | ரூ. 3,600/- |

(எரிபொருள் எவையும் வழங்கப்படமாட்டாது)

இவை குறைந்தது 10, 000 கி. கி. அல்லது முழு லோட்டுக்கு (Full load) உரியவையாகும். பகுதி லோட் (Part load) காவிச் செல்லுமிடத்து கொடுப்பனவு லோட்டுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும்.

எமது விளம்பரத்திற்கமைய விண்ணப்பித்தவர்கள் தமது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து, பெயர் விவரங்களைப் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்குக் கிளையில் பதிந்து தமக்குரிய அனுமதிப்பத்திரத்தினைப் (Lorry pass) பெற்றுக் கொள்ளலாம். அனுமதிப்பத்திரம் பெறாத எந்த ஒரு லொறியும் சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது என்பதைத் தயவு செய்து குறித்துக் கொள்ளவும்.

01. அடையாள அட்டை
02. உரிமைச் சான்றிதழ்
03. சாரதி அனுமதிப்பத்திரம்
04. 1997 ஆம் ஆண்டுக்கு வாகனவரி செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு.

பாதுகாப்புப்பகுதியினரின் அனுமதி (Security clearance) இதுவரை பெறாதவர்கள் உரிய படிவங்களைப் புனர்வாழ்வுப் பகுதியில் பெற்று நிரப்பி உடனடியாக ஒப்படைக்கவும்.

செ. பத்மநாதன்,
யாழ். அரச அதிபர்.

(சி/972)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

உதயம்: 26–05–1936

அஸ்தமனம்: 22–05–1997

## முத்து தம்பிராஜா
(கோப்பாய் தெற்கு)

இடம் பெயர்ந்து வந்த வேளை எம்மை அரவணைத்து ஆதரித்தாயே குஞ்சி ஐயா- சோர்வின்றி ஓய்வின்றி உழைத்தாயே குஞ்சி ஐயா — எங்களை கலங்க வைத்துச் சென்றாயே குஞ்சி ஐயா
உங்கள் ஆத்மா சாந்தி பெற கண்ணீரால் மலர் நனைத்து தங்கள் உருவ நிழலில் அஞ்சலியாய்ப் படைக்கின்றோம்.

தகவல்:
செ. அனுரா
(பேறாமகன்)

பலாலி தெற்கு,
வசாவிளான்.

(47900)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான

## திருமதி யோகலக்ஷ்மி சதானந்தன்

அவர்களின் மறைவை யொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் கலந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தொண்ணூறில் வங்கியில் காலடி எடுத்து வைத்து
தொண்ணூற்றிரண்டில் மங்கள நாயகியாக மணமகனை வரித்து
தொண்ணூற்றேழு வரை எம்மொடு பண்புடன் பழகி
தொண்ணூற்றேழில் அகவை முப்பத்தெட்டில் எமை விட்டுச் சென்றனையோ!

இலங்கை வங்கி நலன்புரிக் கழகம்,
சுன்னாகம்.

(47899)

# திருமந்திரம் விரிவுரை

கொழும்புத்துறை, ஜூன் 20
நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் திருமந்திரம் மூன்றாவது தொடர்விரிவுரை இடம் பெறும். பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் இவ் விரிவுரையை வழங்குவார்.

(ஐ-30)

# கடையில் திருட்டு

கொழும்புத்துறை, ஜூன் 20
யாழ். றக்கா வீதியில் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த 10 ஆம் திகதி திருட்டு இடம் பெற்றுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.
சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள் உட்பட பல பொருள்கள் அங்கிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

(ஐ-30)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## நூல் நிலைய புத்தகம் கட்டுவதற்குத்தேவையான பொருள்களுக்கு கேள்விப் பத்திரம் கோரல்

யாழ். பல்கலைக்கழக நூல் நிலைய புத்தகங்களை கட்டுவதற்கான பொருள்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்கல்களுடன் தொடர்பு கொண்டு தேவையான பொருள்களின் பட்டியலைப் பார்வையிடலாம்.
2. கேள்விப் பத்திரதாரர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக 250/- ரூபாவை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் மட்டுமே கேள்விப் பத்திரங்களை 97-06-25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் பதிவாளரது அறையிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் அல்லது தபால் மூலமாகவோ பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித மேலுறையில் யூயே/ பிலு/ எல்/19/7 எனக் குறிப்பிடப்பட வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் முற்பகல் 10-30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997. 06. 18.
[illegible]

# 31 ஆம் நாள் கண்ணீர்த் துளிகள்

மலர்வு: 04–06–1939

உதிர்வு: 21–05–1997

## திருமதி அன்னம்மா சின்னத்தம்பி

எண்ணாத நேரத்தில் எம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்ற அன்பு அம்மாவுக்கு எமது கண்ணீர்த்துளிகள்.

உம் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சி. தர்மலிங்கம்
இடைக்குறிச்சி,
வரணி.

(47907)

# யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் **05 - 07 - 97** சனிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கல்லூரியின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ. சி. தனபாலசிங்கம்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(47908)

# புனித அந்தோனியார் ஆலய பெருவிழா

**ஊர்காவற்றுறை - 1997**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 7 வருடங்களின் பின் இம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை புதிய நேரம் 9.00 மணிக்கு நடைபெறும். யாழ். ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.

21 ஆம் திகதி சனிக்கிழமை காலை தொடங்கி 22 ஆம் திகதி ஞாயிறு மாலை வரை விசேட பஸ் சேவை யாழ். பேருந்து நிலையத்திலிருந்து வடக்கு றோட் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.

(47889)

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

## கால்நடைத் தீவனம் விற்பனைக்கு

எமது சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் தரமான கறவைப்பசு உணவு விற்பனைக்குண்டு.

50 கிலோ பொதி ஒன்று ரூபா 750/-
25 கிலோ பொதி ஒன்று ரூபா 375/-
சில்லறை விற்பனை விலை 1 கிலோ 16/-

தேவையானவர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

எங்கள் சங்கத்தின் கிளைகளில் அல்லது கீழ்க்காண் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

மேலும் சோளன் குருணல், தவிடு, தேங்காய்ப் பிண்ணாக்கு என்பனவும் விற்பனைக்குண்டு.

தேவையானவர்கள் கொள்வனவு செய்யலாம்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்-யாழ். சேவைக்கு புதிய கப்பல் பெற முயற்சி

## தொடர்ந்து அகதிகள் அங்கு வருகை

வவுனியா, ஜூன் 20

இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதியில் இருந்து மன்னாருக்கு வந்து சேர்ந்துள்ளவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப மேலும் ஒரு கப்பலைச் சேவையில் அமர்த்த மன்னார் அரச அதிபர் குறூஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வன்னியில் இருந்து ஏற்கனவே மன்னார் வந்து சேர்ந்துள்ள 3 ஆயிரத்து 243 பேர் யாழ்ப்பாணம் செல்ல கப்பலை எதிர்பார்த்து அங்கு காத்துக்கிடப்பதாலும்—

தொடர்ந்தும் அகதிகள் மன்னார் நோக்கி வந்து கொண்டிருப்பதாலும்—அவர்களை யாழ்ப்பாணம் அனுப்ப வசதியாக பெரிய கப்பல் ஒன்றை வழங்குமாறு அவர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சைக் கேட்டுள்ளார்.

தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள 'தாரகி' கப்பல் ஒன்றுவிட்டு ஒருநாள் சேவையில் ஈடுபட்டு 290 பேரை மட்டுமே ஏற்றிச் செல்கிறது. (ஐ-164-3)

## விசாரணைக்கு அழைக்கப்படாத நபர்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழுவால் பலாலியில் நடத்தப்படும் விசாரணைக்கு இது வரை அழைக்கப்படாதவர்கள் தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு தனது விசாரணைகளை நாளை மறுதினத்துடன் முடித்து விட்டு இறுதி அறிக்கையை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுவதாலேயே இக் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படும்போது அவர்கள் பயணஞ் செய்த வாகனங்கள் குறித்தும், அவர்கள் அச்சமயம் வைத்திருந்த பொருள்கள் குறித்தும் விவரங்கள் மேலிடத்துக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அது தொடர்பான விவரங்களைத் தருமாறும் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஐ-3)

## வானொலி, ரூபவாஹினிக்கு புதிய பணிப்பாளர் சபைகள்

கொழும்பு, ஜூன் 20

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம் ஆகியவற்றுக்கு புதிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக முன்னாள் தலைவர் ஜினதாஸ பீரிஸே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் காமினி கிரவல்ல பேராசிரியர் எஸ். தில்லைநாதன், இரத்தினபுரி மாவட்ட எம். பியான காலஞ்சென்ற நாலந்த எல்லாவெலவின் தாயாரான திருமதி சுராங்கனி எல்லாவெல, டொமினிக் சன்சோனி ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக மீண்டும் டியூ குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக சட்டத்தரணி ஜெயந்தி விநோதன், பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி மைக்கல் பெர்னாண்டோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச கொள்கை பரப்புச் செயலாளர் அல்ஹாஜ் எம். இசட் நசீர் அஹமட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கனேடிய பிரதிநிதி வருவார்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கனேடிய அரசின் சர்வதேச அபிவிருத்திச் சபை ஆலோசகர் பிலி எஸ் மோண்டி எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் வரும் இவர், யாழ். அரச அதிபர், யாழ். ஆயர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரைச் சந்தித்து குடாநாட்டு நிலைவரங்களைக் கேட்டறிவார்.

மூன்று நாள்கள் அவர் இங்கு தங்கியிருந்து பல இடங்களுக்கும் சென்று பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## புலிகள் மூவர் களப்பலி

வவுனியா, ஜூன், 20

மன்னாரிலும், யாழ். மாவட்டத்திலும் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் தமதுதரப்பில் 3போராளிகள் களப்பலியானதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி மன்னாரில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் மேஜர் நாயகம் (அற்புதராசா லோகரஞ்சன் —மட்டக்களப்பு), லெப்டினன்ட் விடுதலை (தம்பிஜயா விக்னேஸ்வரன் — வவுனியா) ஆகிய இரு போராளிகளும்—

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது தன்னைத் தானே சுட்டு இறையரசன் (செல்வராசா அமல்ராஜ்—யாழ்ப்பாணம்) என்ற போராளியும் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது. (ஐ-164-3)

## மாணவர் ஒன்றுகூடல்

திருநெல்வேலி ஜூன் 20

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல், மதிய போசன விருந்து என்பன அண்மையில் நடைபெற்றன.

யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ-135)

# மன்னார் நகருக்குச் செல்வதில் சைக்கிள் வியாபாரிகள் நாட்டம்

## இதனால் அங்கு பொருள் தட்டுப்பாடு

வவுனியா, ஜூன் 20

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்குப் பொருள்களை எடுத்துச் சென்று விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் தமக்குரிய பொருள்களை மன்னார் நகரில் கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளதை அடுத்து அங்கு உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வியாபாரிகள் முன்னர் தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்குச் சென்று தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்துவந்தனர்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வவுனியா நகருக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது பெரிதும் தடைப்பட்டுள்ளது.

இதனால் சிறு வியாபாரிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து உயிலங்குளம் வழியாக மன்னார் நகருக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

வாரத்தில் மூன்று நாள்கள் உயிலங்குளம் வழியாக மன்னார் நகருக்குச் செல்லப் பொதுமக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். (ஐ-3-164)

## ஜி. சீ. ஈ உயர்தர மாணவருக்கு விசேட பயிற்சிப் பரீட்சை

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஜி சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கு தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் பயிற்சிப் பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும்.

யாழ். கல்விப்பணிப்பாளர்களின் பணிப்புரைக்கமைய இப் பரீட்சையை தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகின்றது.

சகல உயர்தர மாணவர்களையும் இப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கல்விப்பணிப்பாளர்கள் கோரியுள்ளனர். (ஐ-118)

## குடும்ப நல சேவையாளர்கள்: 19 பேருக்கு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடக்கு, கிழக்கு மாகாண சபையால் கடந்த 27-10-96 இல் நடத்தப்பட்ட மாணவ குடும்ப நலச்சேவை உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் சித்தியெய்திய பத்தொன்பது பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட சுகாதார சேவை மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

கல்வித் தகைமை (மூலப் பிரதி) மற்றும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் அங்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ந. சிவபாதம் சம்பந்தப்பட்டோரைக் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 19 பேரினதும் விவரம் வருமாறு:-

★ சிவப்பிரகாசம் ஜெயவானி — சாவகச்சேரி.
★ இன்பவதனி முத்தையா — சண்டிலிப்பாய்.
★ வி. தையல்நாயகி — சாவகச்சேரி.
★ பத்மசிறி பத்மநாதன்— சாவகச்சேரி.
★ சுப்பிரமணியம் விஜிதா — கோப்பாய்.
★ தில்லைநாதன் நளீஸ்வரி — சுழிபுரம்.
★ வடிவேலு ரமேஷ்வரி — சாவகச்சேரி.
★ கந்தசாமி வளர்மதி — வண்ணார்பண்ணை மேற்கு.
★ இரஞ்சிதமலர் பாலன் — சித்தன்கேணி.
★ கவிதா அருணாசலம்— சாவகச்சேரி.
★ திருச்செந்தூர் சுகந்தினி — நாவற்குழி.
★ தேவராசா மஞ்சுளா— கொழும்புத்துறை.
★ பரஞ்சோதி அன்புச்செல்வி — கொக்குவில்கிழக்கு
★ செல்லத்துரை மகேஸ்வரி — கொழும்புத்துறை.
★ நடேசு கமலேஸ்வரி — தெல்லிப்பழை.
★ நாகலிங்கம் நாகேஸ்வரி — வட்டுக்கோட்டை.
★ வடிவேல் கோகுலதீபா — இடைக்குறிச்சி, வரணி.
★ சதாசிவம் பாமதி — மீசாலை.
★ பேரம்பலம் பவளமலர் — கோ டாவில் கிழக்கு. (ஐ-15)

## பருத்தித்துறை கோட்ட மட்ட விளையாட்டு

பருத்தித்துறை ஜூன் 20

பருத்தித்துறைக் கல்விக் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் இ. சிவராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-118)

# யாழ். வெங்காயத்துக்கு கூடிய சந்தை வாய்ப்பு கிடைக்கும் என விவசாயிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 20

''குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை வெளிமாவட்டங்களில் சந்தைப்படுத்துவதில் இருந்து வந்த தடைகள் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதால், விவசாயிகள் சிறுபோக வெங்காயச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு இலாபம் ஈட்ட முடியும்.

யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் (விஸ்தரிப்பு) த. சிவலோகநாதன் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத இடப்பெயர்வின் பின் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் வலிகாமம் பகுதியில் மீளக் குடியமர்ந்த விவசாயிகளும், வடமராட்சிப் பகுதி விவசாயிகளும் கூடிய நிலப்பரப்பில் வெங்காயச் செய்கையை மேற்கொண்டு கூடிய விளைவையும் பெற்றனர்.

மீளக் குடியமர்ந்த விவசாயிகளுக்கு அரச அதிபரின் முயற்சி காரணமாக பத்தாயிரம் அந்தர் விதைவெங்காயத்தை அரசாங்கம் இலவசமாக வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்தியது வெங்காயச் செய்கை அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

இதே நேரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை வெளி மாவட்டத்திற்கு அனுப்பப் பலவிதமான முயற்சிகள் எடுக்கப்பட்டும் எதிர் பாராதவிதமாக அனுப்புமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

இதனால் உள்ளூர்ச்சந்தை விலை மிகவும் குறைந்தது டன் விற்க முடியாத நிலையும் ஏற்பட்ட காரணத்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். இதன் காரணமாக 1997 ஆம் ஆண்டுச் சிறுபோகத்தில் வலிகாமப் பகுதி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நாட்டம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

கடந்த 1996 — 97 காலபோகத்தில் குறைந்த நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தின் ஒரு பகுதி வடமராட்சிப் பகுதியில் இருந்து கொழும்புக்கு அனுப்பியதன் மூலம் அப்பகுதி விவசாயிகள் சிலர் கூடிய இலாபத்தைப் பெற்றனர். கடந்த பெரும்போக உற்பத்தி மிகவும் குறைவாக இருந்த காரணத்தினாலும் இம்மாவட்டத்தில் சிறுபோகச் செய்கைக்கு விதை வெங்காயம் தேவை என்ற காரணத்தினாலும் வெங்காயத்தைக் கொழும்புக்கு அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே கொழும்புக்கு அனுப்புவதில் உள்ள தடங்கல்கள் நிவர்த்தி செய்யப்பட்ட காரணத்தினால் இச்சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை வெளிமாவட்டத்திற்கு அனுப்பிச் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு உண்டென்பதை வெங்காயச்செய்கையாளர்கள் கவனத்திற்கெடுத்து வடமராட்சிப் பகுதியில் இருக்கும் தரமான விதைவெங்காயத்தைப் பெற்று ஆடிப்போகத்தில் கூடிய நிலப்பரப்பில் வெங்காயச் செய்கைமேற்கொண்டு அதிக லாபத்தைப் பெற்றுப் பயனடைய வேண்டுகிறேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நடராசபிள்ளை திருநாவுக்கரசு ஆகிய எனது அடையாள அட்டை 552730992V நாயன்மார்கட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 80, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
[47894]

சுரபி மகேந்திரா என்பவருடைய இல. 0905003167 விசேட அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'ரேவதி ஜுவலறி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
[47885]

சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேந்த தம்பையா தர்மபாலன் என்பவருடைய இல. 561013209V தேசிய அடையாள அட்டை, இல. 091003204 விசேட அடையாள அட்டை என்பன மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 09-06-97 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி நியூ செலக்சன் புடைவையகத்தில் வழங்கவும், சன்மானம் வழங்கப்படும். [சி/975]

### தேவை

அச்சுத்தொழில் பழக ஆர்வமுள்ள பயிலுநர்கள் தேவை. G.C.E. O/L படித்தவர்கள் விரும்பத்தக்கது, இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். முல்லை அச்சகம், ஆடிய பாதம் வீதி, (சத்தோலிக்க தேவாலயம முன்பாக), நல்லூர், யாழ்ப்பாணம். [47902]


**ஈசன் கல்வி நிலையம்**
**கோண்டாவில்**

கணக்கியல்:
திரு. பாலவாசன்

**A/L 97 DAY**
நிதிப்பாய்ச்சல் கூற்று
ஆரம்பம்:
22 - 06 - 1997
11.00 a.m

- நிர்வாகி

(47881)

**G. A. Q. 98**
கிறீஸ்தவம்
Mrs. A. மல்லிகா
(B. A.)
தமிழ்
Mr. நவரத்தினம்
(M. A.)
**SHAMROCK**
யா/ஈச்சமோட்டை
- நிர்வாகி

(47897)

**BRIGHTEN INSTITUTE**
சாவகச்சேரி
**O/L 97**
பகல் நேர வகுப்புகள்
ஆரம்பம்:
23 - 06 - 97
காலை 7.00 மணி

★ கணித, விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 5 மணித்தியாலங்கள்.

- நிர்வாகி

(47901)


## 2 ஆவது பிறந்ததின வாழ்த்து



## ★ சிவராஜா துவாரகன் ★

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த
**சிவராஜா குணவதி தம்பதிகளின்**

செல்வப் புதல்வன் துவாரகன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 20 - 06 - 97 இல் உடுப்பிட்டியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை ஜேர்மனியில் இருக்கும் அன்பு பப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, கனடா மாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், அக்கா, அண்ணாமார், கொழும்பு டாக்டர் பெரியப்பா, பெரியம்மா, லண்டன் அண்ணா, அக்கா, கனடா பெரியப்பா, பெரியம்மா, உடுப்பிட்டி மாமா, அத்தைமார், மச்சாள்மார் வாழைச்சேனை பெரியப்பா, பெரியம்மா, பெரியண்ணா, றமணி அக்கா, சஞூதி சின்னண்ணா, புத்தூர் பெரியப்பா, பெரியம்மா, அன்ரா, மாமா, அம்மப்பாமார், அம்மம்மாமார், மல்லாவி மா,மாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல எம்பெருமான் துணைகொண்டு பல்லாண்டு காலம் சகல செல்வங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்:

தகவல்;
**குணா சிவராஜா.**
(தாய்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(47839)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### சுன்னாகம்

## நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 02 - 07 - 97ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் இவ்வலுவலகத்தில் அதற்குரிய படிவங்களைப் பெற்று, தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

1, இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த, (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
3. வயது 18-க்குக் குறையாமலும், 45-க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. நல்ல ஆரோக்கியமும் நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
6. நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கு அவரால் சேகரிக்கப்படும் பணத்தில் 20% தரகுப் பணமாக வழங்கப்படும்.
7. இவர்கள் சபையில் தற்காலிக/நிரந்தர நியமனங்கள் கோரமுடியாது.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம், விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு மேற்குறித்த திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**ஆ. மகாலிங்கம்**
**விசேட ஆணையாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
17 - 06 - 1997. (சி/976)

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

எதிர்வரும் 22-06-97 இல் நடைபெறவிருந்த ஒன்றுகூடல் வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

· பழைய மாணவர் சங்கம்.

(சி/974)

## ஜனன தின ஞாபகார்த்தம்



உலகத்தில் உதித்தது:
**20 - 06 - 1918**

கர்த்தருக்குள் நித்திரையானது:
**20—04—1996**

திருமதி
## ரூத் இரத்தினமமா தவரத்தினம்
(பேபி)


அம்மா! உங்கள் தேவ பக்தி, அன்பு, தளராத முயற்சி, கனிவான பேச்சு, இரக்க சிந்தை ஆகியவற்றால் எம் குடும்பத்தில் மட்டுமல்லாது ஏனையோர் மனங்களிலும் நீங்காத நினைவு பெற்றுள்ளீர்கள்.

"பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறியபடியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும், ஆறுதலும் அடைந்திருக்கிறோம்." — பிலே. 1 : 7

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்,

தகவல்:
திருமதி தங்கராணி பாலேந்திரக்குமார் (மகள்)
'தவ இல்லம்'
அராலி வடக்கு. (47869)

## ஓராண்டு நினைவலைகள்



## திரு நவரத்தினம் புஸ்பராசா
(வர்த்தகர், மாம்பழம் சந்தி, அரியாலை)

தோற்றம்: **23 - 01 - 1959**
மறைவு: **30 - 06 - 1996**

37 வருடம் பாசமென்னும் நெய்யூற்றி, எம்மை பகலிரவாய் வளர்த்து வந்த அன்பு மைந்தா, எமது கடமை செய்வீர் என நம்பியிருந்த வேளையிலே, கிளிநொச்சி குளம் தனிலே உமதுயிர் பறித்தானோ காலன்; ஆண்டு ஒன்று சென்றாலும் உமது இன் முகம் மறக்கவோ முடியவில்லை. உமது ஆத்மா சாந்தி அடைவதாக!

ஓம் சாந்தி!

நின் பிரிவால் துயருறும்:
மனைவி, பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

க, நவரத்தினம்,
185, கண்டி வீதி,
அரியாலை.
(47891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன் தர வல்லது ஒன்று உண்டு

கடந்த வருடத்தில்—1996ஆம் ஆண்டில்—இலங்கையில் அரசாங்கத் தரப்பில் மனித உரிமை மீறல் செயல்கள் உச்ச நிலையை அடைந்திருந்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்திருக்கின்றது. 1992ஆம் ஆண்டின் பின்னர், கழிந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிடும்போது, சென்ற ஆண்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களே மிக உச்சமாக இருந்தன என்றும் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அப்பாவி மக்கள் காணாமற்போன சம்பவங்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றிருப்பது மன்னிப்புச் சபையின் அறிக்கையில் விசேடமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

போர் தீவிரமடைந்த 1990 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்தம், பல சந்தர்ப்பங்களில் மாதாந்தம், இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை மன்னிப்புச் சபை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது வழக்கமாகிவிட்டது.

ஆரம்பத்தில் — எண்பதுகளின் நடுப்பகுதியில்— தமது தரப்பில் மனித உரிமைகள் மீறப்படுவதை இலங்கை அரசு மறுத்து வந்தது. தன் மீதான குற்றச் சாட்டுக்களை அது பொருட்படுத்தியதும் இல்லை.

ஆனால் தொண்ணூறுகளின் பின்னர் அரசால் அவ்வாறு செய்ய முடியவில்லை. வெளிநாடுகளிடம் இருந்து நிதி பெறுவதன் பொருட்டு, மனித உரிமை மீறலைத் தடுப்பதில் தான் அக்கறை கொள்வதாகக் காட்ட வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு உண்டானது!

1994 ஆம் ஆண்டில் ஆட்சி மாறிய போதிலும், மனித உரிமை மீறல் மேன்மேலும் மோசமடைகிறதே அன்றித் திருந்துவதாக இல்லை. மனித உரிமைகளைப் பேணுவதற்கென்று ஆகப் பிந்தி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்று கடந்த மார்ச் மாதத்தில் நிறுவப்பட்டது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட மேற்படி ஆணைக்குழு, ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள விடயம் நிலைமையைத் துலாம்பரமாக வெளிக்காட்டுகிறது.

பலர் கைது செய்யப்பட்டுப் பல மாதங்களாகியும் மனித உரிமை ஆணைக் குழுவுக்குக் கூடத் தெரியப்படுத்தப்படவில்லை. மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் படையினர் சட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி செயற்படவில்லை— என்பது ஆணைக்குழுவின் முறைப்பாடு.

கைப்புண்ணைப் பார்க்கக் கண்ணாடி தேவையில்லையே!

வடக்கு — கிழக்கிலேயே இப்போது மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுகின்றன. அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் போர் நிறுத்தப்படுவது மிக அவசியமும், அவசரமும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது, நடைமுறையில் பயன்தரக் கூடியது அது ஒன்றே.

# ஜனாதிபதி தேர்தலில் சேஷனும் போட்டி!

புதுடில்லி, ஜூன் 20

இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை முன்னாள் இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் ஜி. என். சேஷன் நேற்றுத் தாக்கல் செய்தார்.

சிவசேனை மற்றும் சில சுயேச்சை உறுப்பினர்கள் சேஷனின் பெயரை வழிமொழிந்தனர்.

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணியும் காங்கிரஸ் கட்சியும் கே. ஆர். நாராயணனை இந்திய ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதென ஏற்கனவே முடிவு செய்துள்ளன.

கே. ஆர். நாராயணன் தற்போது உப ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

மனுத்தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இம்மாதம் 23 ஆம் திகதி ஆகும். அடுத்த மாதம் 14 ஆம் திகதி வாக்களிப்பு இடம்பெறும்.

(இ-10)

## பானங்களை குளிரச் செய்யும் நவீன 'கப்' அறிமுகம்

சிங்கப்பூர், ஜூன் 20

குளிர்பானங்களை ஊற்றியதும் தானாகவே அவற்றைக் குளிரச் செய்யும் நவீன ரக குவளை (''கப்'') ஒன்று சிங்கப்பூரில் நடந்த கண்காட்சி ஒன்றில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு குளிர்சாதனப் பெட்டி செய்யும் வேலையை இந்தக் ''கப்'' தானாகவே செய்து அதற்குள் ஊற்றப்படும் பானங்களை ஒன்றரை நிமிட நேரத்தில் 15 செல்சியஸ்களினால் குளிர்ச்சியடையச் செய்து விடுகிறது.

ஆனால் இந்த வகையான 'கப்' களின் பாவனை பூமி வெப்பமடைவதை அதிகரிக்கச் செய்து விடும் என்று சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் எச்சரித்துள்ளன.

இந்த ரக 'கப்' பினுள் அழுத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் வாயு, காபனீரொட்சைட்டை விட வெப்பத்தை 2 ஆயிரம் மடங்கு அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள நிறுவனம் ஒன்று இந்த 'கப்' களை தயாரித்துள்ளது.

(ஐ)

## ஆயுளை அழிக்கும் ஆறு வாள்கள்

விதுரனைப் பார்த்து திருதராஷ்டிரன் ''மனிதனுக்கு ஆயுள் நூறு வருடங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தும் பூரண ஆயுள் பெற்று யாரும் வாழ்வதாகத் தெரியவில்லையே! ஏன்?'' என்று கேட்கிறான்.

அதற்கு விதுரன் ''ஆறு கூரிய வாள்கள் மனிதனின் ஆயுளை அழிக்கின்றன. அதிக கர்வம், அதிகம் பேசுதல், தியாகமனப்பான்மையின்மை, கோபம், சுயநலம், நண்பர்களுக்குத் துரோகம் செய்தல் ஆகியனவே அவை.'' என்று பதில் கூறுகிறார்.

விதுரன் கூறிய அந்த ஆறு வாள்களைப் பற்றியும் சற்று ஆராய்வோம்.

★ தான் கெட்டிக்காரன், தான் செல்வந்தன், தான் கொடையாளி, தான் நல்லவன், பிறர் கெட்டவர்கள் என்று நினைப்பதால்தான் கர்வம் அதிகரிக்கிறது.

கர்வம் கொண்டவனைக் கடவுள் விரைவில் அழித்துவிடுவார். ஆகவே கர்வம் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் தன் விடயத்தில் குற்றங்களையும் பிறர் விடயத்தில் குணங்களையும் பார்க்க வேண்டும்.

★ அதிகம் பேசுகிறவன் வீண் விடயங்களைப் பற்றிப் பேசி வீண் வம்பை விலைக்கு வாங்குவான்.

எனவே தான் கீதையில், ''கடுமையில்லாததும் உண்மையானதும் பிரியமானதும் நன்மையைக் கருதியதுமான வார்த்தை எதுவோ, அது வாக்கினால் செய்யப்படும் தவம்'' என்கிறார் பகவான். எனவே நாம் வாக்கினாலும் தவம் செய்யப் பழக வேண்டும்.

★ எல்லாவற்றையும் நாம் தான் அனுபவிக்கவேண்டும் என்ற ஆசையின் காரணமாகத்தான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவதில்லை. எனவே ''நாம் இந்த உலகில் பிறந்ததே நமக்காக அல்ல; பிறருக்கு உதவுவதற்காகத் தான்'' என்பதை நாம் உணர்ந்தால் தியாக மனப்பான்மை ஏற்படும்.

★ கோபம் தான் மனிதனுடைய முதலாவது எதிரி. கோபத்தை வென்றவன் தான் யோகி. அவன் தான் உலகில் சுகப்படுவான். கோபத்துக்கு வசப்பட்டவன் தர்மம் எது? அதர்மம் எது? என்ற விவேகத்தை இழந்து பாவங்கள் செய்கின்றான். அதாவது மொத்தத்தில் மது அருந்தியவன் செயற்படுவது போலச் செயற்படுகின்றான். எனவே என்ன தீமைகள் ஏற்பட்டாலும் யார் நம்மைக் கோபித்துக் கொண்டாலும் அவற்றைச் சகித்துக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

★ சுயநலம் தான் எல்லாத் தீமைகளுக்கும் காரணம். சுயநலம் பாராட்டுகின்றவர்கள் தங்கள் காரியம் ஆக வேண்டும் என்பதற்காக எந்தப் பாவத்தையும் செய்ய அஞ்சமாட்டார்கள். பிறர் இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற வேண்டும். பிறர் துன்புறுவதைக் கண்டு நாம் துன்புற வேண்டும். இப்படிச் செய்வதால் சுயநலம் நீங்கி விடும்.

★ உலகில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிது. அப்படி இருக்கும்போது நாம் அவர்களுக்குத் துரோகம் செய்வதைப் போன்ற அக்கிரமம் உண்டா?

கீதையில் பகவான் கூறியுள்ளது போல் நாம் எல்லோருடனும் வெறுப்பின்றியும் சிநேக மனப்பான்மையுடனும் கருணையுடனும் பழகவேண்டும்.

மேற்கூறியவாறு வாழ்ந்து நாம் எமது ஆயுளுக்குக் கவசம் அமைப்போமானால் ஆயுளை அழிக்கும் ஆறுவாள்களும் எம் ஆயுளைத் தாக்க மாட்டா.

-நா. நவராஜ்

### ஞானக்கதிர்

### நாளை

ஆனி 7

சனிக்கிழமை

திதி: பிரதமை

நள்ளிரவு 11.57 வரை:

நட்சத்திரம் மூலம்

பிற்பகல் 2.59 வரை:

சுபநேரம் : 2.54-4.24

ராகுகாலம்:8.54-10.24

(பஞ்சாங்கம் இரவுக்குப் பழைய நேரப்படி)

## பனாமா கப்பல் மூழ்கியது

கல்கத்தா, ஜூன் 20

இரும்பு, உருக்கு கட்டுமானப் பொருள்களை ஏற்றிச் சென்ற பனாமா நாட்டு ''கிறீன் போபல்'' என்ற கப்பல் நேற்று கல்கத்தாவிலிருந்து ஹொங்கொங் செல்லும் வழியில் ஹுகிளி நதியில் மூழ்கியது.

மாலுமிகளும், கப்பல் பணியாட்களும் மீட்கப்பட்டனர். இருப்பினும் கப்பல் மூழ்கி விட்டது. (இ-10)

## இனக் கொலை விசாரணை

கின்ஸாசா, ஜூன் 20

கொங்கோ ஜனநாயக குடியரசில் (முன்னாள் ஸயர்) நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இனக் கொலை பற்றிய விசாரணை ஒன்றுக்கு ஆயத்தம் செய்யவென ஐ. நா. குழுவொன்று ஜெனிவாவில் இருந்து நேற்று கின்ஸாசா நோக்கிப் புறப்பட்டது. (இ-4)

## தலிபான் படைகள் மீது தாக்குதல்

காபூல், ஜூன் 20

ஆப்கானிஸ்தானில் அஹமட்ஷா மசூதின் படைகள் நேற்று ஜாவிஸ் பெராஜ் நகரிலுள்ள தலிபான் படைகள் மீது பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

வடக்கு ஆப்கான் பிராந்தியத்தை தலைநகர் காபூலுடன் இணைக்கும் முக்கிய நகர் ஜாவிஸ் பெராஜ் ஆகும்.

(இ-10)

## பொல்பொட் குறித்து தகவல் எதுவுமில்லை

நொம்பென், ஜூன் 20

கம்போடியாவில் கெமரூச் இயக்கத்தின் தலைவர் பொல்பொட் சரணடைந்ததாக வெளியான செய்திகளில் உண்மையில்லை எனவும் பொல்பொட் காணாமற்போயுள்ளார் எனவும் கம்போடியாவில் இருந்து கிடைக்கும் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் பொல்பொட் சரணடைந்தது பற்றியோ அல்லது காணாமற்போனது பற்றியோ தமக்கு அக்கறையில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(இ-10)

## குஜ்ரால் - நவாஸ் ஷெரிப் நேரடி தொலைபேசி இணைப்பு

புதுடில்லி, ஜூன் 20

இந்தியா— பாகிஸ்தான் பிரதமர்களுக்கு இடையில் நேற்று முதல் மீண்டும் நேரடி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரடி தொலைபேசி இணைப்பு 6 வருடங்களுக்கு முன்னர் துண்டிக்கப்பட்டிருந்தது.

இணைப்பு ஏற்படுத்தப்பட்டவுடன் இந்திய பிரதமர் குஜ்ராலும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பும் 5 அல்லது 6 நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடினார் என்று பி.ரி.ஐ. தெரிவித்தது.

முன்னாள் பிரதமர்களான ராஜீவ்காந்தி, பெனாஸீர் பூட்டோ ஆகியோரின் பதவிக்காலத்தில் இந்த நேரடி தொலைபேசி இணைப்பு இருந்து வந்தது. (இ-4)

## வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையரில் 120 பேர் மரணம்

கொழும்பு, ஜூன் 20

வெளிநாட்டில் தொழில் செய்து வரும் இலங்கையரில் 120 பேர் இந்த ஆண்டு இதுவரை இறந்துள்ளனர் என அரசாங்க புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 100பேர் மத்திய கிழக்கு நாடுகளில் இறந்துள்ளனர். இவர்களில் 75பேர் பெண்களாவர்.

இறந்தோரில் 3பேர் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் நஞ்சூட்டப்பட்டும், மற்றொருவர் எரிகாயத்துடனும் இறந்தனர். ஏழுபேர் தற்கொலை செய்துள்ளனர்.

ஏனையோரின் மரணங்கள். இயற்கை மரணங்கள் என்றும்—

மாரடைப்பாலேயே பெரும்பாலானவர்கள் இறந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## பலியான பிரதம இன்ஸ்பெக்டருக்கு உதவிப் பொலீஸ் அதிபர் பதவி

கொழும்பு, ஜூன் 20

கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மகா ஓயாப் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட அதிரடிப்படை கொமாண்டோ பிரிவைச் சேர்ந்த பிரதம இன்ஸ்பெக்டர் உதயகுமாரவுக்கு மரணத்துக்குப் பின்னான பதவி உயர்வாக உதவிப் பொலீஸ் அதிபர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டு விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட 11 சடலங்களில் இவரின் சடலமும் அடங்கியிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

மகாஓயா பகுதித் தாக்குதலில் 14 அதிரடிப்படை கொமாண்டோக்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீமுத்து நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும், 5ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

(ஐ-100)

★ ★ ★

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் பூரணை தினத்தை ஒட்டி இன்று வெள்ளிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நல்லூர் சிவன், கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள், புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆகிய ஆலயங்களில் இன்று பூரணைதின வழிபாடுகள் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், விசேட பூசையும், பகல் திருவிழாவும் நடைபெறும்.

(ஐ-4)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் குடாரப்பு கன்னி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

புலோப்பளை கிழக்குபுனித பேதுருவானவர் (சென். பீற்றர்ஸ்) தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும், திருப்பலிப் பூசையும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாட்பாடற்பலி பூசையும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனிப்பிள்ளை அடிகள் நடத்துவார். (ஐ-117)

★ ★ ★

காரைநகர் வடக்கு மல்லிகை சேவகப் பெருமாள் கோயில் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. (ஐ-3)

★ ★ ★

பளை, அரசர்கேணி மொண்டுவான் வைரவர் கோவிலின் வருடாந்தப் பொங்கல் விழா, இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்று, சனி அதிகாலை வழிவெட்டுதலுடன் பொங்கல் நிறைவுபெறும். வெள்ளி இரவு விசேட நிகழ்ச்சியாக, சாவகச்சேரி கலிகைமூர்த்தியினரின் தவில் நாதஸ்வரக் கச்சேரியும், காவடியாட்டமும், அன்னதானமும் இடம்பெறும். (இ)

# காணாமற் போனோர் விவரம் பதிய ஈ. பி. டி. பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்றுவரை கைதாகி இதுவரை தகவல் தெரியாத நிலையில் உள்ளவர்கள் தொடர்பான விவரங்களை தமது அலுவலகத்தில் பதியுமாறு ஈ. பி. டி. பி. அமைப்பு யாழ். அலுவலகத்தினர் கேட்டுள்ளனர். (இ-3)

# மீள குடியமர்ந்தோருக்கு அவசர உதவிகள்

ஊர்காவற்றுறை, ஜூன் 20

தம்பாட்டி மற்றும் நெருஞ்சிமுனை ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

மீளக் குடியமர்ந்த 72 குடும்பங்களைச் சேர்ந்த இவர்களுக்கு இன்று பாய், லாம்பு போன்ற பொருள்களை ஈ. பி. டி. பி. அமைப்பின் தீவக அரசியல் அமைப்பாளர் என். மனோகரனும் தீவக உதவி அரசியல் அமைப்பாளர் லோகனும் வழங்குவார்கள் என அந்த அமைப்பினால் தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

## முருகப்பா கனகசபை

(இளைப்பாறிய எழுதுநர்)

முகமாலையைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாளை வதிவிடமாகவும் கொண்ட முருகப்பா கனகசபை (இளைப்பாறிய எழுதுநர்) (18-06-97) புதன் கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் தவமணி (இளைப்பாறிய உப தபால் அதிபர், எழுதுமட்டுவாள்) அவர்களின் அன்புக் கணவரும், பவானி (லண்டன்), சிறீதரன் (ஆஸ்திரேலியா), வசந்தி (லண்டன்), சசீதரன் (கொழும்பு), முரளிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தகுமார், கீதா, பாலச்சந்திரன், சிந்திக்கா, சுசீலா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-06-97 சனிக்கிழமை 8/1, ஸ்ராட் போட் ரெறஸ், கொழும்பு - 6 இல்லத்தில் நடைபெற்று மாலை 3 மணிக்கு பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பாலகிருஷ்ணன்
(மருமகன்)

கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(47896)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

# சிறிசேனகூரே கைதானது குறித்து ஐ. தே. க. கண்டனம்

கொழும்பு, ஜூன் 20

ஐ. தே. க. முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டதை ஐ. தே. கட்சி கண்டித்துள்ளது.

ஐ. தே. க. செயலாளர் நாயகம் நேற்று இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

நாட்டின் சட்ட விதிகளின் பிரகாரம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவருக்கு எதிராக அவசரகாலச் சட்டம் அரசினால் தவறான முறையில் பிரயோகிக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெளிவான குற்றச்சாட்டுக்களை முன்வைக்காது இவரைக் கைது செய்ததன் மூலம் அவசரகாலச் சட்ட விதிகள் மீறப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# மிதிவெடியில் படையினர் சிக்கினர்

வவுனியா, ஜூன் 20

கடந்த 10ஆம் திகதி தாண்டிக்குளம் மற்றும் நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து அப்பகுதியில் சோதனை மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த படையினரில் நால்வர் விடுதலைப் புலிகளால் புதைத்துவைக்கப்பட்ட ''ஜொனி'' மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-10-164)

### தாண்டிக்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்]

ணுவ பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

வவுனியா நகரில் ஆங்காங்கே திடீரென இராணுவ சோதனைச் சாவடிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இராணுவத்தினர் வவுனியாவுக்கு நகர்த்தப்பட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் பலர் வவுனியாவுக்குள் ஊடுருவி இருப்பதாக இராணுவ உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-4)

### கிழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்)

சிறு தாக்குதல்களிலும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தற்பொழுது படையினரால் வன்னியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை அதன் இலக்கை அடைய நீண்ட நாள்கள் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுவதால் கிழக்கையும் பலப்படுத்தி, தற்பொழுது ஏற்பட்டுவரும் இழப்பைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் (18ஆம் திகதி) புல்மோட்டையில் தாம் மேற்கொண்ட இரு வெவ்வேறு தாக்குதல்களில் 44 படையினர் பலியானதாக ''புலிகளின் குரல்'' வானொலி நேற்று தெரிவித்தது.

ரோந்து சென்ற படையினர் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலில் 27 படையினர் பலியானதாகவும்—

புல்மோட்டை பொலீஸ் நிலையம் மற்றும் புல்மோட்டை இராணுவ முகாம் மீது மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது 17படையினர் பலியானதாகவும் அது மேலும் தெரிவித்தது.

(இ-10-164)

### விமானச்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்பது குறித்து முடிவு காணப்படவில்லை என்றும் — அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதல் சேவையில் ஈடுபட்ட சஸகஸ் தான் விமானங்கள் 3 ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட பயணிகளுக்காக பயணத்தை மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-160)

## சிறிசேன கூரே விவகாரம்:

# அடிப்படை உரிமைமனு திங்களன்று பரிசீலனை

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது சட்ட விரோதமானது என்று கூறி அவரது வழக்கறிஞர்கள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவை மேலும் பரிசீலனை செய்வதை உயர் நீதிமன்றம் எதிர் வருகின்ற திங்கட்கிழமை வரை பிற்போட்டுள்ளது.

சிறிசேன கூரே சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி வழக்கறிஞர் கே. என். சொக்ஸி இந்த மனுவை ஆதரித்து தமது வாதங்களைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வது அவசியம் என்று கருதிய உயர் நீதிமன்றம் இது பற்றி தேவையான நடவடிக்கை எடுக்கும் படி நேற்று பணிப்புரை விடுத்தது.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் பிரேமதாசாவின் நெருங்கிய சகாவான சிறிசேன கூரே கடந்த திங்கட்கிழமை கைதானது தெரிந்ததே.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்ததாக சிறிசேன கூரே மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-4)

# புளியங்குளத்தில் கிபிர் குண்டு வீச்சு

நேற்றுக்காலை 7.00 மணியளவில் புளியங்குளம் பகுதியில் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின.

ஓமந்தைப் பகுதியிலிருந்து புளியங்குளத்தை நோக்கி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இவற்றால் ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியாகவில்லை. (இ-4-10-164)

# பீற்றர் கெனமனின் புத்தகங்கள் யாழ். நூல் நிலையத்துக்கு

கொழும்பு, ஜூன் 20

இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற பீற்றர் கெனமன் தனது பிரத்தியேக வாசிகசாலையில் சேகரித்து வைத்திருந்த பல்துறை சார்ந்த பெறுமதிவாய்ந்த 10 ஆயிரம் புத்தகங்கள் யாழ். நூலகத்துக்கென நேற்று கொழும்பில் வைத்து அமைச்சர் மங்கள சமர வீரவிடம் கையளிக்கப்பட்டன.

யாழ். நூலகத்துக்கு கையளிக்க வேண்டும் என்ற அவரது இறுதி விருப்பத்தின் படியே இந்த நூல்கள் யாழ். நூலக புனரமைப்புக்குப் பொறுப்பானவெண்தாமரை இயக்கத் தலைவரும் தபால் தொலைத் தொடர்புகள், தொடர்புச் சாதன அமைச்சருமான மங்கள சமர வீரவிடம் கையளிக்கப்பட்டன.

(இ-4-5)

### இந்திய,..

(முதலாம் பக்கத் தொடர்)

ளாகிக் காயம் அடைந்தனர்.

இந்தச்சம்பவங்கள் காரணமாக நேற்று இராமேஸ்வரத்தில் பெரும் பதற்றம் நிலவியது.

இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.

(இ-4-10)

# பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 20

இன்று வெள்ளிக்கிழமை காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 150 பயணிகளை ஏற்றிக் கொண்டு கப்பல் புறப்பட இருப்பதால் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் இன்று காலை 7-00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் தெரிவித்துள்ளது.

(இ-4)

### வெளியேற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த சந்திப்பு இரண்டு மணி நேரம் நீடித்தது.

தமது தற்போதைய நிலைப்பாடு தாம் அடுத்து எடுக்க உள்ள சட்ட நடவடிக்கைகள் குறித்து இருவரும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்திகரமாக இருந்ததாகவும்—

ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை அக்கறையுடன் செவிமடுத்தார் என்றும் இந்த சந்திப்புக்குப் பின்னர் ரரமமூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-21)

### படையினரை....

(முதலாம் பக்கத் தொடர்)

இதைத் தொடர்ந்து ''ஸ்கைகாப்'' என்ற விமான முகவரிடம் விமானப்படை ஏ. என். 12 ரக விமானம் ஒன்றை வாடகைக்குப் பெற்றுள்ளது.

அத்துடன் ஏற்கனவே உக்கிரைனிடம் இருந்து இலங்கை விமானப்படை கொள்வனவு செய்த ஏழு ஏ. என். 325 ரக போக்குவரத்து விமானங்களில் தற்சமயம் விமானப்படையிடம் எஞ்சியுள்ள 3 விமானங்களும் இதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஏழு விமானங்களில் 3 ஏற்கனவே விபத்தில் நாசமாகியது. ஒன்று ஓடமுடியாத நிலையில் உள்ளது. (இ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org